REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 4உ வெள்ளி (17—5—57) ★ வெளியீடு: வைகாசி 5உ சனி (18—5—57) இதழ் [290

சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை

கல்கத்தா, மே 16—

ஆண்டொன்றுக்கு 30 இலட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய உருக்குத் தொழிற்சாலை ஒன்றினை தென்னாட்டில் நிறுவுவதென டில்லி சர்க்கார் தீர்மானித்திருப்பதாக நம்பகமாய்த் தெரியவருகிறது.

தென்னாட்டில் நிறுவப்படும் அந்தத் தொழிற்சாலைக்கு பழுப்பு நிலக்கரி உபயோகப்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது.

பம்பாய் நகர் வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லையே!

காந்தியார் கற்றுத் தந்ததே மொழிவழி மாநிலக் கோரிக்கை

குருதி கொட்டிய பிறகும் குசராத் மாநிலம் அமைக்க மறுப்பதேன்?

மக்கள் சபையில் உரிமை முழக்கம்

'பம்பாய் நகரம் குசராத்தியருக்குத் தரப்பட வேண்டும் என்று எவரும் கேட்கவில்லை; எனவே, அதனைக் காரணமாகக் காட்டி, குசராத்தி மொழிவழி மாநிலம் அமைவதைத் தடை செய்வானேன்?' என்ற குரல், மக்கள் சபையில் எழுந்துள்ளது!

இந்துலால் யக்னிக் என்ற மகா குசராத் ஜனதா பரிஷத்தைச் சேர்ந்த எம்.பி., குடியரசுத் தலைவர் உரைமீது நடைபெறும் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மகா குசராத் மாநிலம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

"இதுபற்றிப் பேசும்போது நான் கொஞ்சம் அஞ்ச வேண்டியவனாக இருக்கிறேன்; ஏதோ ஒரு 'பிடி' என் தொண்டையை நெறிப்பதுபோல நான் உணருகிறேன்; காரணம், மொழிவழி மாநிலம் வேண்டும் என்று பேசினால், உடனே, மொழிவெறி கொண்டுவிட்டதாகவும் வகுப்புவாதம் பேசுவதாகவும் ஒரு சிலர் பேசுகின்றனர்.

"காந்தியாரிடமிருந்துதான் மொழிவழி மாநிலம் பற்றி 1920-ல் அறிந்தேன். அவர், 'காங்கிரசேகூட மொழி அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும்' என்று கூறியதுடன், 'பிரிட்டிஷார் சென்றதும் சர்க்கார் நிர்வாகம் மக்களின் மொழியிலேயே நடைபெற வேண்டும்' என்றும் கூறியிருந்தார்.

"மாநிலப் புனரமைப்பு விவகாரத்தில் சர்க்கார் முதலில், பம்பாய், குசராத், மராட்டியம் என மூன்று மாநிலங்கள் அமைக்கப்படும் எனத் தெரிவித்திருந்தனர். நாங்கள், எங்கள் இலட்சியம் ஈடேறுவதாகக் கனவு கண்டோம்; ஆனால், திடீரென ஒருநாள் காலையில் சர்க்காரின் கொள்கை மாறியது!

"விளைவு — அகமதாபாத்தில் மாணவர்கள் வேலைநிறுத்தம்! போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்! ஏழு பேர் பலி— அதுபோன்ற சம்பவங்கள்!

"அகிம்சையும், உண்மையும், விளங்க காந்தியாரும், படேலும் எழுப்பிய காங்கிரஸ் மாளிகைமுன் இரத்தம் பெருக்கெடுத்தோடிற்று; இது ஏன்?

"இத்தனைக்கும் பிறகும் குசராத் மாநிலம் அமைக்க மறுப்பது நியாயமல்ல!

"பம்பாய் நகரம் குசராத் மாநிலத்திற்கு வேண்டுமென எவரும் கேட்கவில்லை."

வேலைநிறுத்த உரிமையை உடனே கையாளக்கூடாதாம்

தொழிலுக்கும் சமுதாயத்திற்கும் சிக்கலான நிலைமை ஏற்படுகிறதாம்

புதுடில்லி, மே. 16—

"தகராறுகள் ஏற்படும்போது, முதலில் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள சமரச சாதனங்களையும் நேர்முக சமரசப் பேச்சு வார்த்தை முறையையும் முழு அளவில் தொழிலாளர்கள் பயன்படுத்திக்கொண்டு, அதன் பலாபலன்களை அறிந்து கொள்ளும் வரையில் வேலை நிறுத்தம் செய்வதற்குள்ள உரிமையை தொழிலாளர்கள் கையாளக்கூடாது" என்று மத்திய தொழில் அமைச்சர் நந்தா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

"நாட்டின் முக்கிய தேவை உற்பத்தி அதிகரிப்பாகும்; இது தடைபடுவதற்கு இடமேற்படக்கூடாது; அவ்வாறு தடை ஏற்படுவதால் அந்தத் தொழிலுக்கும் சமுதாயத்திற்கும் அனாவசியமான நஷ்டம் ஏற்படுவதுமட்டுமல்லாமல், தொழிலாளர்களுக்கும் சிக்கலான நிலைமை ஏற்பட்டு வருகிறது; எனவே, வேலைநிறுத்தம் வேண்டியது மிக அவசியமாகும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாதிப் பெயருக்குச் சீட்டு!

சந்திகார், மே 16—

பஞ்சாப் மாநில அரசாங்க இலாகாக்கள் சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளிலும் சாதி, இன, மதம் முதலியன குறிப்பிடுவதை நீக்கிவிட வேண்டும் என்று பஞ்சாப் மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளதாம்.

நீதி மன்றங்கள், போலீஸ், சிறை முதலிய நிர்வாகங்களில், மேற்குறிப்பிட்ட விவரங்கள் இனி பதிவு செய்யப்பட மாட்டாது.

அரசாங்க நிதி இலாகா விதிகளில் இதற்கான திருத்தங்கள் செய்யப்படுமாம்.

ஆள் மாருட்டம் ஏற்படாத வகையில், இனி தந்தையின் பெயரோடு பாட்டனின் பெயரும் பதிவு செய்யப்படுமாம்.

சோஷலிஸ்டுகள் போராட்டம்

1,074 பேர் கைது

இலக்குணபுரி, மே 16—

இங்கு சோஷலிஸ்டுகள் துவங்கியுள்ள போராட்டத்தையொட்டி இன்று 105 தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்துடன் மொத்தம் 1,074 பேர் கைதாகியுள்ளனர் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விலைவாசிகள் ஏறத் துவங்கிவிட்டன!

ஏழை-எளியோர் முதுகெலும்பு முறியும்

'வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கும் நிலை தோற்றம்

புதிய வரி விதிப்புகள்: திக்கெட்டும் கண்டனம்

டெல்லி சர்க்காரின் உத்தேச வரி விதிப்புத் திட்டத்திற்கு திக்கெட்டிலுமிருந்து கண்டனக் குரல் எழும்பியிருக்கிறது.

மிகப் பெரும்பாலான வரி விதிப்புகள் ஏழை-எளிய மக்களை நேரடியாகப் பாதிக்கின்றன என்பதை, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பலருமேகூடக் கண்டித்துள்ளனர்.

வரி விதிப்பு உத்தேசங்களடங்கிய வரவு-செலவுத் திட்டம் வெளியிடப்பட்ட சில மணி நேரத்திற்குள்ளாகவே சென்னை போன்ற நகரங்களிலெல்லாம், பல பொருள்களின் விலைகள் உயர்த்தப்பட்டுவிட்டன.

பல பண்டங்கள், கிடைப்பது அரிதாகி விடக்கூடுமோ என்ற அச்சம் தோன்றிவிட்டது.

மண்ணெண்ணெய், தீப்பெட்டி, தேயிலை, காப்பி, சர்க்கரை இவற்றின் விலைகள் இப்போதே உயர்த்தப்பட்டுள்ளன!

பணக்காரர்களையும், மேல்தட்டிலிருப்பவர்களையும் பாதிக்கக்கூடியனவாக ஒரு வரி விதிப்புகளே இருக்கின்றன என்றபோதிலும், அந்த வரி விதிப்பையும் எதிர்த்துப் பலர் கூச்சலிடுகின்றனர்; அவர்களுக்கு ஏழை-எளிய மக்களைப் பாதிக்கக்கூடிய வரி விதிப்புகள், படவில்லை போலும்!

மக்கள் சபை உறுப்பினர் கண்டனம்

"இந்த வரவு-செலவுத் திட்டத்தை சில மாதங்களுக்கு முன்பே கொண்டுவந்திருந்தால், காங்கிரஸ் இப்போது மீண்டும் ஆட்சியில் அமர்ந்திருக்க முடியாது" என்கிறார் ஒரு சுயேச்சை!

புத்திசாலித்தனத்திற்கு விலக்கு

"நல்ல வேளை! புத்திசாலித்தனத்திற்கு வரி விதிக்காமல் விட்டார்களே!" என்கிறார், டாக்டர் அனூப் சிங் என்ற காங்கிரஸ்காரர்!

கேள்விகளுக்கு வரி இல்லையே!

"நல்ல காலம்! நாங்கள் மக்கள் சபையில் எழுப்பும் கேள்விகளுக்கு வரி விதிக்காமல் விடுத்தனரே!" என்று ஆச்சரியம் தெரிவித்திருக்கிறார், கம்யூனிஸ்டு உறுப்பினரான வி. பி. நாயர்!

சேரிகள் அதிகமாகும்

"சேரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும்" என்கிறார், மற்றொரு காங்கிரஸ் உறுப்பினர்!

முதுகெலும்பு முறியும்

"குறைந்த வருமானமுடைய மக்களின் - ஏழை எளியவர்களின் முதுகெலும்பை முறிக்கப் போகின்றன, இப்புதிய வரிகள்" என்கிறார், ஒரு பி. சோ. உறுப்பினர்!

பகற் கொள்ளை

"இது பகற் கொள்ளை என்பதைத் தவிர வேறென்ன?" என்று கேட்கிறார், மற்றொரு சுயேச்சை!

"சர்க்காரே உற்பத்தியையும் விநியோகத்தையும் கைப்பற்றி, நேரடியான சோஷலிசப் பொருளாதாரக் கொள்கையை அமுல் செய்யலாமே!" என்று கேட்டிருக்கிறார், தாகே என்ற 'ஜனநாயகவாதி'!

ஆதரவு!

தேபரும் நேருவும் வரிவிதிப்புகளை ஆதரித்துக் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

ஆச்சாரியார் கண்டனம்

ஆச்சாரியார், பொதுவாக புதிய வரி விதிப்புகளைக் கண்டித்திருந்தாலும், அவர் கவலை தெரிவித்திருப்பது, சொத்துக்களுக்கும் செலவினங்களுக்கும் வரி விதிப்பது பற்றித்தான்!

வர்த்தகக் கழகங்கள் கண்டனம்

மைசூர், சென்னை வர்த்தகக் கழகத் தலைவர்கள், புதிய வரி விதிப்புகளில், சில மட்டுமே தங்களைப் பாதிக்கும் என்பது தங்களுக்கு மகிழ்ச்சி தருவதாகவும், ஆனால், அந்த வரி விதிப்புகளைக் கூடத் தாங்கள் கண்டிப்பதாகவும் அதற்குக் காரணம், இந்த வரி விதிப்புகளால் தனியார் துறை தொழிலபிவிருத்தி முதலீட்டு முயற்சிகள் வெகுவாகப் பாதிக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

கண்டனம் எழுப்பும் அனைவரும் ஒருமுகமாகத் தெரிவித்துள்ள கருத்து, 'இந்தப் புதிய வரி விதிப்புகளால் மக்களது குறிப்பாக சமூகத்தின் மிகப் பெரும்பாலான ஏழை-எளிய நடுத்தர மக்களின் வாழ்க்கைச் செலவுப் பன்மடங்கு உயரும்; என்பதுதான்!

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17—5—57 வெள்ளி

பாகல்மேடு நாடகம்-(2)

★

முதலமைச்சர் காமராசர் நடத்திய பாகல்மேடு நாடகத்தில் கலந்துகொண்ட கிராம மக்கள் வெளியிட்டுள்ள கோரிக்கைகளையும், அதற்கு முதலமைச்சர் கூறியுள்ள பதில்களையும் அப்படியே வெளியிட்டிருந்தோம். அங்கு மக்கள் வெளியிட்டுள்ள தேவைகள் அனைத்தும் இன்றியமையாதவை என்பதை நாம் சொல்லத் தேவை இல்லை. அவ்வாறு வெளியிடப்பட்டுள்ள தேவைகளில் சிலவற்றையாவது உடனடியாக நிறைவேற்றிவைக்க முதலமைச்சர் அவ்விடத்திலேயே ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால்தான், மாநாடு கூட்டப்பட்டதின் விரும்பிய நோக்கம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது எனத் திருப்தி அடைவதற்கும் இடமேற்பட்டிருக்கும்.

மாநாடு கூட்டப்படுவதற்கான நோக்கம் என விளம்பரப் படுத்தப்பட்டது மாநாட்டு சந்தடியில் மறைந்தே போயிருக்கிறது. மாநாட்டிற்காகக் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கம் பூர்த்தி செய்யப்படவில்லையானாலும், மாநாட்டில் மக்கள் வெளியிட்ட கோரிக்கைகள் பற்றி முதலமைச்சர் நேரடியாக பதிலளித்திருந்தாலாவது, முதலமைச்சரின் நல்லெண்ணத்தை ஒருவராலும் சந்தேகிக்கமுடியாது போயிருக்கும். அப்படியும் முதலமைச்சர் நடந்துகொள்ளவில்லை.

பாதை வசதி கோரினர் சிலர்; பள்ளிக்கூடம் வேண்டும் என்றனர் சிலர்; குடிதண்ணீர் ஏற்பாடு தேவை என்றனர் சிலர்; நான்கு கிராமங்களுக்கு ஒரு மருத்துவவிடுதி வீதம் அமைக்கவேண்டும் என்றனர் சிலர்; குடும்பம் ஒன்றுக்கு ஐந்து செண்ட் வீதம் குடியிருக்க இடம் ஒதுக்கவேண்டும் என்றனர் சிலர்: இலஞ்சப்பேய் தாண்டவமாடுகிறது என்றனர் சிலர்; அதை ஒழிக்கவேண்டும் என்றனர் வேறு சிலர்.

பாதை போட்டுத் தருவதாக முதலமைச்சர் வாக்களித்திருப்பார்; குடி தண்ணீர் கிடைக்க வழிகாண முதலமைச்சர் முடிவு கட்டியிருப்பார்; பள்ளிக்கூடம் அமைக்க முதலமைச்சர் ஒப்பியிருப்பார்; மருத்துவ விடுதிக்கு முதலமைச்சர் கால்கோள் விழா நடத்தி இருப்பார்: குடிசை அமைத்துக்கொள்ள குடும்பம் ஒன்றுக்குக் கோரிய ஐந்து செண்டுக்குப் பதிலாக பத்து செண்டு நிலத்தை முதலமைச்சர் அவ்விடத்திலேயே வழங்கி விட்டிருப்பார்; என்றெல்லாம் பொதுமக்கள் முடிவுகட்டிக் கொண்டிருக்கக்கூடும். அவ்வாறு பொதுமக்கள் முடிவுகட்டிக் கொள்ளுவதும் வியப்புக்குரியதல்ல. ஏனெனில் மாநாடு கூட்டப்பட்டதின் நோக்கம் பற்றி, மிகமிகப் பகட்டாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கும் பொழுது, அவ்வாறன்றி பொதுமக்களால் வேறு எவ்வாறு முடிவுகட்டிக்கொள்ளுவது சாத்தியமாகும்?

மக்கள் கோரிக்கைகள் அனைத்திற்கும், ரத்தினச் சுருக்கமாக ஒரே ஒரு பதிலை முதலமைச்சர் தனக்கே உரித்தான அலங்கார பேச்சு நடையில் அளித்துள்ளார். அதாவது, 'ஒவ்வொரு ஊரிலும் எல்லா வசதிகளையும், செய்யமுடியாது' என்றத் தெளிவான பதிலை முதலமைச்சர் பாகல்மேடு நாடகத்தில் பகர்ந்துள்ளார்.

'சொற்ப தொகைதான் கடன் கேட்கிறார்கள்; கொடுப்பதில் தவறில்லை' எனக் கடன் கோரிய மக்களுக்கு ஆறுதலும், நம்பிக்கையும் ஏற்படும் வகையில் நயம்படக்கூறிய முதலமைச்சர் 'கடன் தருவது பற்றி ஆலோசிக்கப்படும்; ஆனால் பணம் திரும்பி வருமா என்பதைக் கவனித்துத்தான் தரமுடியும்' என்று இறுதியாகக் கூறுவதின் மூலம், அவர்களின் ஆசையில் மண் விழச் செய்துவிட்டார்.

தங்கள் தேவைகளை சிற்றூர் மக்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டுதான் இருக்கின்றார்கள் என்பதும், அவைகளை அதிகாரிகள் முன்னிலையில் துணிந்து கூறவும் அவர்கள் பின்வாங்கமாட்டார்கள் என்பதும், முதலமைச்சர் நடத்திய பாகல்மேடு நாடகத்தின் முற்பகுதியிலிருந்து விளக்கமாகிறது.

ஆனால், மக்கள் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிவைக்க வேண்டிய அரசாங்கத்தின் செயல் முறையை வெளிப்படுத்திக் காட்டும் நாடகத்தின் பிற்பகுதியோ, எப்பொழுதும் போல் ஏமாற்றம் அளிப்பதாகவும், காலத்தைக் கடத்துவதாகவும், அலட்சியப்படுத்துவதாகவும் அமைந்திருக்கிறது.

கிராமங்கள் அபிவிருத்தி குறித்து 700 மனுக்கள் மாவட்ட அரசாங்க அதிகாரியிடம் தரப்பட்டு இருக்கின்றதாம். அதை ஆராய மாவட்ட அரசாங்க அதிகாரியின் அலுவலகத்தில் முதலமைச்சர் கூட்டம் கூட்டப் போகிறாராம். அதன் பிறகு சமுதாய நலத்திட்ட ஊழியர்களுடன் ஒன்றிரண்டு நாள் முதலமைச்சர் விவாதிக்கப்போகிறாராம். அப்பொழுது திட்டங்களில் எது சாத்தியமானது என முதலமைச்சர் ஆராய இருக்கின்றாராம்!

இந்த முடிவுடன் பாகல்மேடு நாடகம் மங்களகரமாக முடிவுற்றிருக்கிறது.

நான்கு மணி நேரம் நாடகம் நடைபெற்று இருக்கின்றது. முதலமைச்சர், அதிகாரிகளுடன் அம்சொந்தக்கட்சியினருடனும் மனமகிழ்வுடன் அந்த நான்கு மணி நேரப் பொழுதைப் போக்கி இருக்கின்றார். பாகல்மேடு நாடகத்தின் மூலம் கிடைத்துள்ள உருவான பலன் இதுதான்—இதுவேதான். இவ்வகையில் மக்கள் வரிப்பணம் பாழானதுதான் மிச்சம்!

ஊழலில் உழலும் டெல்லி நிர்வாகம்!

மக்கள் சபையில் கிருபளானி கண்டனம்

தூதுவர் அலுவலக ஊழல்களை அம்பலமாக்குகிறார்

புதுடில்லி, மே 15—

டெல்லி சர்க்காரில் ஊழல்கள், வகையிலும் தொகையிலும் பெருகிவரும் விதம் குறித்து மீண்டும் மக்கள் சபையில் கண்டனம் எழுப்பப்பட்டிருக்கிறது.

குடியரசுத் தலைவர் உரைமீது பேசிய ஆச்சாரிய கிருபளானி கூறியதாவது :—

வெள்ளிக்குப் பதில் தகரம்

"வெளிநாட்டுத் தூதுவரலுவலகத்திற்கு சர்க்கார் செலவில் வாங்கப்பட்ட வெள்ளிப் பாத்திரங்கள் நாளுக்கு நாள் கறுத்து வந்தனவாம். விசாரித்தபோது, மாற்றலாகிப் போன தூதுவரின் மனைவியார், வாங்கப்பட்ட வெள்ளிச் சாமான்களை எடுத்துக் கொண்டு, தகரச் சாமான்களை அதற்குப் பதிலாக வைத்து விட்டார் என்று தெரியவந்தது.

மூன்று கார்கள்!

"மூன்று வருடங்களுக்குள் ஒரு தூதுவர், மூன்று புதிய கார்கள் வாங்கியிருக்கிறார். ஒவ்வொரு முறையும் சர்க்காரிடமிருந்து அதற்காகக் கடன் வாங்கியிருக்கிறார்.

சம்பளமும் 'கிம்பள'மும்!

"இலஞ்ச ஒழிப்புக் கமிட்டியின் அறிக்கையில், கூட்ஸ் கிளார்க்குகளும், இரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர்களும் சம்பாதிக்கும் தொகை, இரயில்வே போர்டு உறுப்பினர்களைப்பார்த்து பொறாமைப்படக்கூடிய அளவு இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

"சர்க்கார் நிர்வாகத்தில் மேலிருந்து கீழ்வரை இலஞ்ச ஊழல் தாண்டவமாடுவதாக பொதுக்கணக்குக் குழுவும், இலஞ்ச ஒழிப்புக் குழுவும் கூறியிருக்கின்றன.

அசட்டை செய்யாதீர்!

"எனவே, நாட்டின் ஏழ்மையை அசட்டை செய்துவிட்டு, பணத்தைப் பாழடிப்பதிலும், ஆடம்பரமாகச் செலவிடுவதுமாக இருந்தால் அபிவிருத்தித் திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியாது.

அதிகாரம் ஏது?

"அதிகப்படியாகச் செலவிட ஆடம்பரமாகக் காரியங்களைச் செய்ய நமக்கு அதிகாரமே இல்லை நாம் செலவிடும் ஒவ்வொரு தம்பிடியையும் நிதானமாக நினைத்துப் பார்த்துச் செய்தாக வேண்டும்.

சரியான வழியல்ல!

"ஆனால் சர்க்கார் சென்றுகொண்டிருக்கிற வழி, ஒரு ஏழை நாட்டிற்கு ஏற்றவழி அல்ல! ஏனெனில், அந்த வழி செல்வதால், மக்களுக்கு உணவு தர முடியவில்லை, குழந்தைகட்குக் கல்வி தர முடியவில்லை!

நூற்றுக்கணக்கில் செலவா?

"சில மந்திரிகள் உபயோகிக்கும் மின்சாரத்திற்கு மட்டும் நூற்றுக்கணக்கில் செலவிடப்பட்டிருப்பதாக அறிகிறேன். இது நியாயமா? மந்திரிகளின் செலவு வரைமுறை கடந்து செல்வதேன்?

இடம் பெறாதது ஏன்?

"நம்மை நேரடியாக பாதிக்கிற கோவா போன்ற பிரச்சினைகள் பற்றி குடியரசுத்தலைவர் உரையில் எதும் இல்லை. மேலும் இலங்கையில் இந்தியர்கள் குடி உரிமை இழப்பது பற்றியும் எதும் காணப்படவில்லை.

"கடந்த பத்து ஆண்டுகளில், இதுபோன்ற குடியரசுத் தலைவர் உரைகளில் அயல்நாட்டுக் கொள்கைதான் இடம்பெறும்; ஆனால் இந்த ஆண்டு, உள்நாட்டுக் கொள்கைகளும் இடம் பெற்றுள்ளன; இது மகிழ்ச்சிக்குரியதோர் மாற்றமே!

"சர்வதேச விவகாரங்களில் சர்க்காரின் இந்த வீழ்ச்சிக்குக் காரணம், உலகம் தனது போக்கிலேயே சென்று கொண்டிருக்கிறது என்பதை தாம் உணர்ந்ததுதானா? தமது 'பஞ்சசீலம்' உலகில் செல்லுபடியாகவில்லை என்பதுதானா?"

சப்பான் முறையில் தொழில் கலைக் கழகம்

பிகாரில் ஏற்படுத்தத் திட்டம்

பாட்ணு, மே 15—

சப்பானில் டோக்கியோ நகரத்தில் உள்ள தொழில் கலைக் கழகம் போன்று பீகாரிலும் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள பல்வேறு கைத்தொழில்களுக்குத் திட்டம் தீட்டுவது, ஆராய்ச்சி நடத்துவது, புதிய 'டிசைன்களை'த் தயாரிப்பது, பயிற்சியளிப்பது, பண உதவி செய்வது, உற்பத்தியான பொருள்களை விற்க வசதியளிப்பது முதலியன இந்தக் கழகத்தின் முக்கிய வேலைகளாகக் கவனிக்கப்படுமாம்.

முதலில் ரூ. 7·57 இலட்சமும், பின்னர் ரூ. 15·22 இலட்சமும் செலவிடப்படுமாம்.

ரஷ்யா-சீனாவுடன் சேர்ந்து இராணுவக்கூட்டு நிறுவுக!

டெல்லி சர்க்காருக்கு காங்கிரஸ் எம். பி. யோசனை

"இந்தியாமீது பாகிஸ்தான் படையெடுப்பதைத் தடுக்க ரஷ்யாவுடனும், சீனாவுடனும் இராணுவக் கூட்டுச் சேர்ந்துகொள்ள வேண்டும்" என்ற ஒரு யோசனையை மக்கள் சபையில் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் வெளியிட்டிருக்கிறார்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசிய அவர், ரஷ்யா, சீனா, இந்தியா ஆகியவற்றின் இராணுவத் தலைமைத் தளபதிகள் ஒன்றுகூடி, கூட்டு இராணுவம் அமைப்பது பற்றி யோசிக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

சேது சமுத்திரத் திட்டம் அமுலாகுமா?

மத்திய அமைச்சர் தரும் தகவல்

புதுடில்லி, மே 15—

சேது சமுத்திர கால்வாய் தோண்டுவதற்காக எவ்வளவு செலவு செய்யவேண்டியிருக்கும் என்பது பற்றியும், திட்டம் முடிந்ததும் அதன்மூலம் எவ்வளவு வருமானம் ஏற்படும் என்பது பற்றியும் ஆராய்ந்துவருவதாகவும், முடிவான புள்ளி விவரங்கள் கிடைத்த பின்னரே அந்தத் திட்டத்தை நடத்துவது பற்றி முடிவு செய்யப்படும் என்றும் மக்கள் சபையில் மத்திய போக்கு-வரத்து அமைச்சர் ராஜ்பகதூர் தெரிவித்துள்ளார்.

க்ஷயரோகத்திற்கு இந்திய மூலிகை!

ஸ்ரீநகர், மே 16—

க்ஷயரோகத்திற்கு வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் 'ஸ்டரப்டோ மைசன்' எனும் மருந்து உபயோகிக்கப்படுகிறது.

'அடாடோடா வாசிகா' எனும் சக்தி மிகுந்த இந்திய மூலிகையைக் கொண்டு க்ஷயரோகம், டைபாயிடு போன்ற நோய்களைக் கொண்டு குணப்படுத்துவதற்கு நடைபெறும் ஆராய்ச்சியில் திருப்திகரமான முடிவுகள் காணப்படுவதாக டாக்டர் கர்னல் யு. எஸ். சோப்ரா என்பவர் தெரிவித்துள்ளார்.

எவ்வளவு தெரியுமா?

புதுடில்லி, மே 16—

'1956—1957-ம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலத்தில் இந்தியா மொத்தம் ரூ. 10,94,00,000 மதிப்புள்ள சரக்குகளை ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்தது. இதே காலத்தில் மொத்தம் ரூ. 10,80,00,000 மதிப்புள்ள சரக்குகளை இந்தியா ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்தது,' என்று மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் தர வேண்டிய பாக்கிகள்

ரூ. 100·34 இலட்சமாம்!

புதுடில்லி, மே 15—

பாகிஸ்தானிடமிருந்து இந்தியாவுக்கு வந்துசேரவேண்டிய கால்வாய்த் தண்ணீர் பாக்கிகளில் தகராறுக்குரியது ரூ. 81·93 இலட்சம் என்றும், தகராறுக்கிடமில்லாதது ரூ. 18·41 இலட்சம் என்றும் மக்கள் சபையில் நீர்ப்பாசன மின்சார இலாகா அமைச்சர் பட்டீல் தெரிவித்துள்ளார்.

குடியானவர் கலகம்!

போலந்தின் பல பாகங்களிலும் நடைபெறுகிறதாம்

வார்சா, மே 15—

குடியானவர்களின் பிரச்சினையில் அக்கறை எடுத்துக்கொள்ளாமலும், அவர்களின் கோரிக்கைகளைப் புறக்கணித்தும் வந்ததின் பயனாக, இன்று போலந்தின் பல்வேறு மாநிலங்களில் குடியானவர்கள் கலகம் செய்துவருவதாக ஐக்கிய குடியானவர் கட்சியின் செயலாளர் கூறியுள்ளார்.

தலைப்பாகை அணியக் கோரிக்கை

கோவை, மே 15—

"அரசாங்க அதிகாரிகள் தலைப்பாகை அணியும் வழக்கத்தை மீண்டும் ஆரம்பித்தால் சுமார் ஒரு இலட்சம் கைத்தறி நெசவாளருக்குப் பிழைப்பு கிடைக்கும்" என்று கோவை கைத்தறி வார விழாவில் கே. எஸ். வீரண்ணன் என்பவர் ஆலோசனை கூறியுள்ளார்.

காந்தியார் காட்டிய பாதை எங்கே?

3,50,000 ரூபாய் செலவிலா புதிய கார்கள்?

தொழிற்சாலை நிறுவி பலருக்கு வேலை தரக்கூடுமே!

பம்பாய், மே 14—

"பம்பாய் அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு புத்தம்புதிய 17 கார்கள் வாங்க ரூ. 3,50,000 ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது; இந்தத் தொகையில் ஒரு சிறிய தொழிற்சாலை அமைத்து வேலையற்ற ஒரு சிலருக்கு வேலை கொடுத்து, நாட்டின் செல்வத்தை அதிகப்படுத்தலாமே!"

என்று, கே. எஸ். இராவ் என்பவர், ஆங்கில தினசரி ஒன்றில் எழுதியுள்ள கடிதத்தில் ஆலோசனை கூறியுள்ளார்.

"அமைச்சர்கள் தங்கள் காரியங்களைச் சரிவர நடத்த கார் வசதி அவசியம் இருக்க வேண்டியதே! ஆனல் அமைச்சர்கள், வீண் செலவு செய்யாமல், இப்போது உள்ள கார்களையே பயன்படுத்தலாம்.

"கிராமங்களுக்குச் செல்லும் போது சிக்கனத்தைக் கையாண்டு இரயில் மூலம் செல்லலாம்.

"அமைச்சர்கள் பல வாக்குறுதிகளைத் தந்துள்ளனர். அதன்படியே அவர்கள் நடப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க உரிமையுண்டு.

"காங்கிரஸ் பதவிக்கு வருவதற்கு முதல் காரணமாக விளங்கிய ஏழைகள், நடுத்தர வகுப்பினர்களின் வேதனை நாளுக்கு நாள் அதிகரித்துவருவதை அமைச்சர்கள் கவனித்து ஆவன செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

"சமீபத்தில் பம்பாய் முதலமைச்சர் தந்த வாக்குறுதிகளைக்கண்டு பெருமிதம் கொண்டோம்; பம்பாய் இருமொழி மாநிலமாக அமைவதை மனப்பூர்வமாக வரவேற்றோம்.

"எல்லாத் துறைகளிலும் சிக்கனத்தைக் கையாண்டு வர வேண்டிய இந்த நேரத்தில், இவ்வளவு பெரிய தொகையை செலவிட்டுப் புதிய கார்களை வாங்குவது, காந்தியார் மக்கள் சேவையைப் பற்றிக் கூறிவந்த இலட்சியத்திற்கு முரணாக உள்ளது"

என்றும், அதே கடிதத்தில், காங்கிரஸ் ஆட்சியில் மக்களைப் பிழிந்து வசூலிக்கப்படும் வரிப்பணம் பாழாக்கப்படுவதைப்பற்றியும் விளக்கமாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

க. அன்பழகன்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

திருவள்ளுவர்நகர், மே 13—

புதுக்கோட்டை இரயில் நிலயத்தில் 11—5—57 காலை பேராசிரியர் க. அன்பழகன் அவர்களை கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் வரவேற்று, புதுக்கோட்டை நகராட்சி ஓய்வு விடுதிக்கு அழைத்துச் சென்றனர்.

மாலை 3 மணியளவில் நகராட்சி ஓய்வு விடுதியில் குடந்தை தோழர் பன்னீர் செல்வம் அவர்கள் தலைமையில் கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் தேநீர் விருந்தளித்து வரவேற்றனர்; தோழர் க. அன்பழகன் அவர்கள் வரவேற்புக்கு நன்றி கூறும் பொழுது, கழக எதிர்காலப் பணி குறித்து விளக்கிப் பேசினர்.

பின்னர் நச்சாந்துப்பட்டியிலுள்ள உயர்நிலைப்பள்ளியின் ஆண்டுவிழா நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்றார்.

வழியில் நமணசமுத்திரம் தி. மு. கழகக் கிளையின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறினர்.

நச்சாந்துப்பட்டி உயர்நிலைப் பள்ளியின் ஆண்டுவிழா கூட்டத்தில் கலந்துகொண்டு சுமார் 7¾ மணிக்கு புதுக்கோட்டை—திருவப்பூர் வள்ளுவர் திடலில் இரவு 7-மணிக்கு நடைபெற்ற தமிழ் மன்றத்தாரின் ஆண்டுவிழாக் கூட்டத்தில் கலந்துகொண்டார். திரு. மா. சுந்தரேசன் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினர். தலைவர் முன்னுரைக்குப் பின் குடந்தை தோழர் பன்னீர்செல்வம் பேசினர்.

பின்னர் தோழர் க. அன்பழகன் அவர்கள், தமிழ் மொழி தாழ்த்தப்படுவதையும், தமிழை அழிக்க இந்தியை எல்லாவகைகளிலும் புகுத்துவதை விளக்கியும், தாயை மகன் தாய் என்று அழைக்காமல், 'வேலைக்காரி' என்று அழைப்பதைப் போன்ற நிலையில் தாய் நாடான தமிழ் நாட்டை 'சென்னை' என்று அழைத்து இழிவுபடுத்துவது தமிழர்களுக்குக் கணணியமாகாது என்று எடுத்துக் கூறியும், தமிழ் நாடு எல்லா வகையிலும் தாழ்ந்திருப்பதை விளக்கியும் பேசினர்.

தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு, கழகச் சார்பிலும், திருவப்பூர் கைத்தறி நெசவாளர்கள் — சாந்தனுதபுரம் பாண்டியன் படிப்பகம்—சாக்குத் தொழிலாளர்கள்—மற்றும் பல படிப்பகங்கள் ஆகியவற்றின் சார்பிலும் மலர் மாலைகள், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

அலுமினியம் தொழிற்சாலைக்கு

மின்சார உற்பத்தி

சேலம், மே. 14—

சென்னை அரசியலார் மராமத்திலாகா அமைச்சர் கக்கனும், மின்சார இலாகா அமைசசர் ராமையாவும் 13-ந் தேதி யன்று மேட்டூருக்குச் சென்றனர். மேட்டூரில் மின்சார உற்பத்தி நிலயத்தை அமைச்சர்கள் பார்வையிட்டனர்.

மேட்டூரில் ரூ. 11½ கோடி செலவில் 2 இலட்சம் 'கிலோ வாட்ஸ்' மின்சாரம் உற்பத்தி செய்ய வகுக்கப்பட்டுள்ள திட்டத்தின் விவரங்களை அமைச்சர்களிடம் அதிகாரிகள் எடுத்துக் கூறினர்.

இந்தத் திட்டம் அரசியலாரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அரசியலார் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

2 இலட்சம் 'கிலோ வாட்ஸ்' மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அது அலுமினியம் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு பெரும் உதவியாய் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (ந. கி.)

வழக்கமாகத் தரப்படும் பரிசாம்!

கோரக்பூர், மே 14—

இரயில்வே ஊழியர்களின் மகன், மகள் ஆகியோர் திருமணத்தின்போது, தரப்படும் வரதட்சணை வழக்கமாகத் தரப்படும் பரிசு என்றும், அதைப் பெற்றுக் கொள்ள அதிகாரிகளின் முன் அனுமதி தேவையில்லை என்றும், ஆனல், முறைப்படி உரிய அதிகாரிகளுக்கு அவற்றின் மதிப்பை அறிவிக்க வேண்டுமென்றும் இரயில்வே நிறுவனம் அறிவித்துள்ளது.

ஒழுங்குதவறிய பள்ளிகள்

அரசாங்கமே ஏற்று நடத்துமாம்

திருவனந்தபுரம், மே 15—

தனியார் நடத்தும்பள்ளிகளில் ஒழுங்குக் குறைவு உறுதிப்படுத்தப்பட்டால், கேரள அரசாங்கம் அந்தப் பள்ளிகளை ஏற்று நடத்துவதற்கும், அந்த நிலையில் எவ்வித நஷ்ட ஈடும் அளிக்காமல் இருக்கவும் ஒரு சட்டத்தை, வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது அரசாங்கம் கொண்டு வரக்கூடுமெனத் தெரியவருகிறது.

புதிய பொதுக்குழு உறுப்பினர்கள்

தி. மு. க. தலைமைக் கழக அறிக்கை 4/57-ன்படி, 12—5—57 அன்று இராயபுரம் 'அறிவக'த்தில், சென்னை மாவட்டத்தில் காலியாக உள்ள மூன்று பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற்றது.

பொதுக்குழு உறுப்பினரான தோழர் ஆர். எஸ். பாண்டியன் அவர்கள், தேர்தல் ஆணையாளராக இருந்து நடத்திய தேர்தலில் சென்னை மாவட்டக் கழகப் பிரதிநிதிகள் 83 பேர் கலந்து கொண்டனர்.

தோழர்கள் ஏ. எஸ். இராமன், வ. சங்கரநாராயணன், சி. பஞ்சாட்சரம் ஆகியோர் பொதுக் குழு உறுப்பினர் பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

தனியார் தொழிலுக்கு

உலக பாங்கி கடனுதவி

சில தகவல்கள்

புதுடில்லி, மே 16—

உலக பாங்கியானது, இதுவரையில் இந்தியாவிலுள்ள பின்வரும் நான்கு தனியார் தொழில் துறை நிறுவனங்களுக்குக் கடன் தொகைகள் வழங்கியிருப்பதாக மத்திய நிதி அமைச்சர் மாநிலங்கள் சபையில் தகவல் தந்துள்ளார்:—

	கோடி டாலர்
டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்	7·50
டாடா ஹைட்ரோ எஜென்சிஸ் லிமிடெட்	1·62
இந்தியன் அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்	5·15
இண்டஸ்டிரியல் கிரெடிட் அண்டு இன்வெஸ்ட்மெண்டு கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா	1·00

இந்தியா - பாகிஸ்தாழு எல்லை நிர்ணயம்

வேலை நிலைமை பற்றி அமைச்சர்

புதுடில்லி, மே 15—

இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையே எல்லையில் 43 - மைல் நீளத்திற்கு அடையாளமிடப்பட்டுள்ளதாகவும், மேலும் 70 மைல் நீளத்திற்கு மராமத்து வேலை நடந்துள்ளதாகவும், தூண்கள் நடுவது செய்துமுடிக்கப்பட்டிருக்கிறது என்றும், மக்கள் சபையில் வெளிநாட்டிலாகா துணை அமைச்சர் இலட்சுமி மேனன் தெரிவித்துள்ளார்.

கொரியாவில் போர்?

வாஷிங்டன், மே 15—

வடக்கு, தெற்கு கொரியா நாடுகளுக்கு அணு ஆயுதங்களை விநியோகம் செய்வதில் அமெரிக்காவும், சீனவும் போட்டியிட்டுக் கொண்டு செயல்படத் துவங்கிவிட்டுள்ளனவாம்!

தென்கொரியாவுக்கு நவீனமானதும், திறன்மிக்கதுமான ஆயுதங்களை விநியோகம் செய்வதுபற்றி அமெரிக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாக டல்லஸ் வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

எனவே, கொரியா மீண்டும் வல்லரசுகளின் போர்க்களமாகக் கூடும் என்று கருதப்படுகிறது.

செம்பியம், பெரம்பூருக்கு தண்ணீர் வசதி

சென்னை, மே 15—

செம்பியம், பெரம்பூர் ஆகிய பகுதிகளில் தண்ணீர் வசதியை அதிகரிக்கச் செய்வதற்கு ரூ. 3 இலட்சம் அனுமதித்துள்ளதாக சென்னை அரசாங்கம் நகரசபைக்கு அறிவித்துள்ளது.

கழகச் செய்திகள்

ஆதங்குடி:

11—4—57ல், நடைபெற்ற தி. மு. கழக செயற்குழுக் கூட்டத்தில் தோழர்கள் நா. தங்கராசன் செயலாளராகவும், சீ. சீதாராமன் பொருளாளராகவும், கோ. பாலசுப்பிரமணியம் மாவட்டப் பிரதிநிதியாகவும், 10 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோவில்பட்டி:

21—4—57ல், கோவில்பட்டி தி. மு. கழகப் பணிமனையில் தோழர் அ. சு. சி. பொன்னுசாமி தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, சென்ற தேர்தலில் பணியாற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்தும், கழகத்துக்குச் சொந்தமான சாமான்களைக் கழகப் பணிகளுக்கு உபயோகிக்க வேண்டுமென்றும், பாராட்டுக் கூட்டம் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

களார்பாக்கம்:

22—4—57ல், களாம்பாக்கம் கிராமத்தில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது தோழர் ஜே. ஆறுமுகம் அவர்களைச் செயலாளராகக்கொண்டு 13 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கட்டிமேடு:

21—4—57ல், கட்டிமேடு தி. மு. கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் கா. அப்துல் மஜீது தலைமையில்கூடி பொதுக் கூட்டம் நடத்துவது பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

பம்பாய்:

24—4—57 இரவு 10½மணிக்கு பம்பாய் 'குவாலியர் டேங்'கில் தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது அழகப்ப செட்டியார் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

பாரைப்பட்டி:

25—4—57ல், பாரைப்பட்டி தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் சே. குமரவேல் செயலாளராகவும், குப்பமுத்து துணைச் செயலாளராகவும், வேலுசாமி பொருளாளராகவும், சே. பழனிசாமி மாவட்டப் பிரதிநிதியாகவும், 7 - பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பழந்தண்டலம்:

25—4—57ல், பழந்தண்டலம் தி. மு. கழகத் துவக்க விழா தோழர் சம்பந்தம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் சிவகுமார் சொற்பொழிவாற்றினர். கழகச் செயலாளராகத் தோழர் எழுமலையும், துணைச் செயலாளராகத் தோழர் தேவராசனும், பொருளாளராகத் தோழர் வேணுகோபாலும், மாவட்டப் பிரதிநிதியாகத் தோழர் இராசபாதரும், 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிலிமிசை:

26—4—57ல், பிலிமிசை தி. மு. கழகத் துவக்க விழா தோடி மைதானத்தில் தோழர் ம. புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் வி. மு. விசயகோபால், பெரியசாமி, அரு. ஆதிமூலம் ஆகியோர் கழகத்தின் கண்ணியத்தினையும், சனநாயக பண்பினையும் காங்கிரசின் சர்வாதிகார போக்கினையும் விளக்கிப் பேசினர்.

திருப்பெயர்:

27—4—57ல், பெரம்பலூர் - திருப்பெயர் தி. மு. கழக துவக்க விழா தோழர் பாலு தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் எஸ். நெடுமாறன், அரு. ஆதிமூலம், பி. ஆர். இரத்தினசாமி ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியபின், தோழர் என். வி. நடராசன் அவர்கள் தேர்தலில் தி. மு. கழகம் என் ஈடுபட்டது என்பதுபற்றிப் பேசினர்.

எலம்பலூர்:

27—4—57ல், எலம்பலூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் அரு. ஆதிமூலம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் சி. நடராசன் செயலாளராகவும், அர்ச்சுனன் துணைச் செயலாளராகவும், ஆ. சின்னையா பொருளாளராகவும், ரா. முத்தையா மாவட்டப் பிரதிநிதியாகவும், 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மணப்பாறை:

27—4—57-ல், மணப்பாறை தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் இளங்கீரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, காசிநாதன், தமிழழகன், கணபதி, சக்ரபாணி ஆகியோர் பேசினர்.

பெரியளூர்:

24—4—57-ல், பெரியளூர் தி. மு. கழகத் துவக்க விழா தோழர் பி. எஸ். இராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்துப் பேசினர். தோழர்கள் அடைக்கலம், கலாநேசன் ஆகியோரும் பேசினர்.

சாத்தியம்:

22—4—57.ல், சாத்தியம் கிராம தி. மு. கழக துவக்க விழா தோழர் காளஞ்சிநாதன் தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் சிற்றுளி-எ. சுப்பிரமணியம், சி. முனுசாமி, என். பூமாலை, மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சித்தூர்:

23—4—57-ல், சேலம் மாவட்டம் சித்தூர் கிராமத்தில் தோழர் இரா. தாண்டவன் தலைமையில் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது தோழர்கள் எஸ். எம். பழனியப்பன் செயலாளராகவும், பி. முத்துகருப்பன் துணைச் செயலாளராகவும், செ. குப்புசாமி பொருளாளராகவும், எம். ஆர். கோபாலகிருஷ்ணன் மாவட்டப் பிரதிநிதியாகவும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாண்டுப் (பம்பாய்):

21—4—57-ல், பாண்டுப் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் தோழர் கே. எஸ். அய்யாபிள்ளை தலைமையில் நடைபெற்றபோது வெற்றிபெற்ற தி. மு. க.தோழர்களுக்கு வாழ்த்து தெரிவித்தும், தி. மு. கழக மக்கள்சபை உறுப்பினர் பம்பாய் வரும்போது வரவேற்பு அளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

4-ம் படிவத்திலும் கல்வி இலவசம்!

திருவனந்தபுரம், மே 14—

உயர்நிலைப் பள்ளிகளில் 4-ம் படிவத்தில் மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பிப்பதற்கான திட்டமொன்றை கேரள அரசாங்கம் ஆராய்ந்துவருகிறது. இதற்கு ரூ. 4 இலட்சம் அதிகச் செலவாகுமாம்.

4, 5, 6-ம் படிவங்களிலும் இலவசமாகக் கல்வி கற்றுத் தருவதானல் ரூ. 24 இலட்சம் அதிகம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்ப்புகளைத் துச்சமென மதித்து நீர்வளிக்குண்டு பரிசோதனை

பிரிட்டனின் ஆகாத போக்கு!

லண்டன், மே 16—

உலகெங்கிருமிருந்து எழுப்பப் பட்ட பலத்த கண்டனங்களையும் பொருட்படுத்தாமல் பிரிட்டன், தனது முதல் நீர்வளிக் குண்டினை மத்திய பசிபிக்கில் நேற்று வெடித்திருக்கிறது.

இந்தக் குண்டு பிரிட்டிஷ் இராயல் விமானப் படையைச் சேர்ந்த குண்டுபொழியும் நான்கு ஜெட் விமானம் ஒன்றிலிருந்து போடப்பட்டதாம்.

இன்று காலைவரை இது குறித்து எதும் தெரிவிக்காமலிருந்துவிட்டு, மாலையில் குண்டை வெடித்துப் பரிசோதனைகளைத் துவக்கியபின், சப்ளை இலாகா மந்திரி சபை மூலம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஜப்பானில் விளைவு

இந்தக் குண்டு பரிசோதனையின் விளைவாக பசிபிக்கில் நடமாடிக் கொண்டிருந்த 15 ஜப்பானிய மீன் பிடிக்கும் படகுகள் பாதிக்கப்பட்டதாக ஹைட்ரஜன் குண்டு பரிசோதனை எதிர்ப்புக் கவுன்சிலின் ஜப்பான் கமிட்டியின் தலைவர் மாசூபாசி தெரிவித்திருக்கிறார்.

குண்டூர் சணல் ஆலை மூடப்பட்டது

1,000 தொழிலாளர் தவிப்பு

நிர்வாகிகள் போக்கு

குண்டூர், மே. 16—

ஒரு பிரிவுத் தொழிலாளர்கள் சுமார் 250 பேர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்று காரணம் காட்டி, குண்டூர் சணல் ஆலையை நிர்வாகிகள் மூடிவிட்டிருக்கின்றனர்.

நிர்வாகிகளுக்கும்தொழிலாளர்களுக்கும் உள்ள தகராறு தீரும் வரையில் ஆலையைத் திறப்பதற்கில்லை என்று நிர்வாகிகள் கூறுகின்றனராம்.

ஆலையில் சுமார் 1,000 பேர் வேலை செய்கின்றனர். அவர்கள் அனைவரும் இந்தக் கதவடைப்பினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது.

கடந்த மே 8-ம் தேதியிலிருந்து செயுப் பிரிவுத் தொழிலாளர்கள் 250 பேர், எந்தவித முன்னறிவிப்புமின்றி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்றும், அதன் விளைவே இந்தக் கதவடைப்பு என்றும், நிர்வாகிகள் கூறுகின்றனர்.

ஆனால், தொழிலாளர்களோ நிர்வாகிகள் இயந்திர சாதனங்களை மாற்றியமைத்துவிட்டதினால், தங்களுக்குக் கூலி நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

இந்தத் தகராறினைத் தீர்த்து வைப்பதில், சர்க்கார் தொழிலாளர் இலாகா அதிகாரி ஒருவர் முயன்றுவருகிறாராம்.

வல்லரசுகளுடன் ஒப்பிட்டுத் திருப்தி

ஐந்தாண்டுத் திட்டச் செலவு 80 நாள் இராணுவச் செலவாம்

புதுடில்லி, மே. 17—

"இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குச் செலவாகும் மொத்தத் தொகை, ஒரு பெரிய வல்லரசு நாட்டின் 80 நாள் இராணுவச் செலவுக்கு சமமானதாகும்" என்று, பண்டித நேருவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாம்; இதை அவர் நேற்று மக்கள் சபையில் கூறியுள்ளார்.

பம்பாய் தி. மு. கழக மத்திய குழுக் கூட்டம்

19—5—57 காலை 10 மணிக்கு, மேற்படி கூட்டம் தாராவி—'திராவிடரகத்'தில் நடைபெறும்; அதுபோது, பம்பாய்க்கு வருகை தரும் தோழர் இ. மனோகரன் அவர்களின் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும். தோழர்கள் தவறாது வருகை தருமாறு செயலாளர் எஸ். தியாகராசன் கேட்டுக்கொள்கிறார்.

திருவில்லிபுத்தூரில் மே தின விழா

19—5—57 மாலை 4 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் மே தின ஊர்வலமும், மாலை 7 மணிக்கு ஆண்டாள்கோவில் மைதானத்தில் பொதுக்கூட்டமும் நடைபெறும்; தோழர் எஸ். இராமதாசு தலைமையில், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், கே. ஆர். பி. மணிமொழியன் ஆகியோர் மே தினம் பற்றிப் பேசுவர்.

மதுரை—கல்லக்குடி நடராசன் நினைவு படிப்பக ஆண்டு விழா

19—5—57 காலை 10 மணிக்கு மேற்படிப் படிப்பக 3-வது ஆண்டு விழா தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெறும்; தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் படிப்பகத்தின்முன் கொடியேற்றி வைத்து கொள்கை விளக்கமளிப்பார். இரவு 7 மணிக்கு பழைய குயவர்பாளையம்-அந்தோணியார் கோவில் எதிர்ப்புறம் தோழர் ச. அன்பானந்தன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் எஸ். முத்து, கே. எஸ். சந்தானம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை—மயிலை 44-வது வட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு:

18—5—57 இரவு 9 மணிக்கு கழகப் பணிமனையில், மேற்படி வட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, பொருளாளர் விலகல் கடிதமும், சில பொதுப் பிரச்சினைகளும் ஆய்வுக்கு வரும்.

இந்தியா ரூ. 12·75 கோடி கடன் பெற்றுள்ளதாம்!

புதுடில்லி, மே 16—

"இந்திய நாட்டுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை ஈடுசெய்ய உலக நாடுகளின் நாணய நிதியிலிருந்து, குறுகிய காலத் தவணையில் இந்தியா இதுவரை ரூ. 12·75 கோடி டாலர் கடன் பெற்றுள்ளது" என்று, மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

பாலங்கள் கட்ட கடன் உதவியாம்

சென்னை, மே 16—

சென்னை மாநிலத்தில் இரயில் பாதைகளைக் கடக்கும் சில இடங்களில் மேல் பாலங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசாங்கம் கடன் உதவியளிக்க முன்வந்துள்ளது.

சென்னை நகரில் கட்டப்படும் 4 பாலங்களுக்கான மொத்தச் செலவு ரூ. 49 இலட்சமாகும்; இதில் அரசாங்கத்தின் பங்கு ரூ. 23,50,000 ஆகும்.

இரயில் பாதைகள் மீது பாலங்கள் கட்ட சென்னை அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் கடனாக ரூ. 68,15,000 தந்துள்ளதாகத் தெரியவருகிறது.

கழகக் கூட்டங்கள்

★

சேலம்—குகை:
மாரியம்மன் கோயில் அருகில்
19—5—57 காலை 9 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
துவக்குபவர்:
க. அன்பழகன்

*　*　*

இரவு 8 மணிக்கு
மாரியம்மன் கோயில் மைதானம்
பேசுபவர்:
அண்ணா

★

சேலம்—17-வதுவட்டம்:
பரமக்குடி நன்னையர் தெரு
19—5—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் திறப்புவிழா
தலைவர்:
பி. வி. ரங்கையா
பேசுபவர்:
அண்ணா

★

தஞ்சாவூர்:
19—5—57 இரவு 7 மணிக்கு
பேசுவோர்:
தி. வி. முத்துகிருஷ்ணன்
க. அன்பரசு

★

ஆடுதுறை:
19—5—57 இரவு 10 மணிக்கு
பேசுவோர்:
தி. வி. முத்துகிருஷ்ணன்
க. அன்பரசு

★

ஜோலார்:
(எர்ணாகுளம் தொகுதி)
ஈசுவரன்கோயில் முன்னிலையில்
19-5-57 மாலை 6-30 மணிக்கு
தலைவர்:
எஸ். ஆர். அர்த்தனாரி
பேசுபவர்:
மு. கருணாநிதி

★

திருச்செந்தூர்:
வ. உ. சி. திடலில்
19—5—57 இரவு 8 மணிக்கு
தி. மு. கழக 4-வது ஆண்டு விழா
தலைவர்:
ஆ. நல்லகண்ணு
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
தாளமுத்து

★

கோவை-பாப்பநாய்க்கன் பாளையம்:
19—5—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
ப. உ. சண்முகம்

*　*　*

இரவு 8 மணிக்கு
தாமஸ் வீதியில்
25-வது வட்டத் தி. மு. கழகத் துவக்க விழா
பேசுபவர்:
ப. உ. சண்முகம்

★

அந்தாளி—(கோவை மாவட்டம்):
டெப்போ மைதானத்தில்
18—5—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: பாபு
பேசுவோர்:
சிற்றுளி-சுப்பிரமணியம்
எஸ்.எஸ்.எம். சுப்பிரமணியம்

திருச்சி மாவட்ட தி.மு.க. 3-வது மாநாடு

வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம்

"18—5—57 காலை 10 மணிக்கு துறையூர் தி. மு. கழக அலுவலகத்தில், மாநாட்டு வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம் நடைபெறும்; அதுசமயம், வரவேற்பு உறுப்பினர் கட்டணம் செலுத்தி வரவேற்பு உறுப்பினராகி துறையூரிலேயே இருந்து தொடர்ந்து பணியாற்றக்கூடிய வாய்ப்பும் வசதியும் பெற்றவர்கள் வரவேற்புக் குழு உறுப்பினர் தேர்வுக்கு நேரில்வந்து பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்," என்று, திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில்-தருமலிங்கம் அறிவிக்கிறார்.

இரங்கனுதம்பேட்டை — அறிஞர் நூல் நிலைய ஆண்டு நிறைவு விழா

19—5—57 இரவு 7½ மணிக்கு மேற்படி நூல் நிலைய முதலாண்டு நிறைவு விழா தோழர் ஏ. அம்மையப்பன் தலைமையில் நடைபெறும்; அதுபோது தோழர்கள் டி. கே. சீனிவாசன், தமிழ் அரசன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

சென்னை கல்விச் சங்கம்

19—5—57 மாலை 5 மணிக்கு சென்னை கல்விச் சங்க ஆதரவில், பட்டாளம்—ஸ்ட்ரான்ஸ் ரோடு, ஆண் பள்ளியில், திரு. கு. வே. இராமகோடி தலைமையில், திரு. வ. சுப்பிரமணியம் 'ஞாலமும்—காலமும்' எனும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

துறையூர்—அம்பேத்கார் மன்றம்

19—5—57 மாலை 6½ மணிக்கு மேற்படி மன்றச் சார்பில், பெரியார் பாடசாலை முன்பு ஓர் பொதுக் கூட்டம் தோழர் மு. பெ. சௌந்திரராசன் தலைமையில் நடைபெறும்; தோழியர் பொற்செல்வி, தோழர்கள் மு.க.இளமுருகு அ.கலியபெருமாள், க. மருதமுத்து, பொ. சண்முகம், அ. சிந்தி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சத்தியவாணிமுத்து

நிகழ்ச்சிகள்

மே 18: ஒடைப்பட்டி (மகளிர் மன்றத் துவக்க விழா)
19: மதுரைநகர்
20: குட்டிமேய்க்கிப்பட்டி
21: திருப்புவனம்

(மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்களும் கலந்துகொள்வார்.)

பொன்-சொக்கலிங்கம்

சுற்றுப்பயணம்

மே 18: மேலவன்னியூர்
19: கடலூர்
20: சிதம்பரம்
24: மூங்கிலடி
26: காலை—மேலநெடும்பூர்
மாலை—சிதம்பரம்
30: கண்ணங்குடி
ஜுன் 2: காலை—மருவத்தூர்

பெங்களூர்—2 இலக்குமணபுரி தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு:

19-5-57 பிற்பகல் 3 மணிக்கு தோழர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமையில், இலக்குமணபுரி தி. மு. கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரவிருப்பதால், தோழர்கள் தவறாது வருகைதர வேண்டப்படுகிறார்கள்.

தமிழ் நாடு கொடிக்கால் விவசாயிகள் சம்மேளனம் பேரவைக் கூட்டம்

19—5—57 மாலை 3 மணிக்கு, சேலம் மாவட்டம்—புதுப்பாளையத்தில் மேற்படி சம்மேளனப் பேரவைக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, சாகுபடியாளர் பாதுகாப்பு மசோதாவால் விவசாயிகளிடையே தோன்றியுள்ள நிலப் பிரச்சினையை பற்றியும், மற்ற முக்கியப் பிரச்சினைகளைப் பற்றியும் ஆராயப்படும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

19—5—57 காலை 9 மணிக்கு, சென்னை 8-வது வட்டம், திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகச் சார்பில், எண் 10, லாயர்சின்னதம்பி முதலித் தெருவில், தோழர் எ. ஆர். சிறுவாணன் தலைமையில் 'மக்களும்-சட்டசபையும்' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

*　*　*

19—5—57 காலை 9 மணிக்கு, சென்னை 46-வது வட்டத் தி. மு. கழகப் பணிமனையில், தோழர் கோவிந்தன் தலைமையில் 'சமுதாயத்திலே நாம்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

*　*　*

19—5—57 இரவு 8 மணிக்கு, சென்னை—மயிலை உதயசூரியன் படிப்பகத்தில், தோழர் க. திருமுகம் தலைமையில் 'ஒழுக்கம்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

திருமணங்கள்

19—5—57 காலை 10 மணிக்கு சேலம் தோழர் சி. சாக்ரடீஸ்—தோழியர் சகுந்தலா வாழ்க்கை ஒப்பந்த விழா, சேலம்—அரிசிபாளையம் ஆர். டி. பால் தெரு, 24-ம் எண் இல்லத்தில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்; அதுபோது, அண்ணா அவர்களும், மற்றும் பலரும் வாழ்த்துரை வழங்குவர்.

*　*　*

19—5—57 காலை 9 மணியளவில் மாயூரம் வட்ட-மேக்கிரிமங்கலம் தோழர் பாண்டியன்—தோழியர் தனலட்சுமி வாழ்க்கை ஒப்பந்த விழா திரு. எஸ். குஞ்சிதபாதம் தலைமையில், மேக்கிரிமங்கலம் மணமகன் இல்லத்தில் நடைபெறும்; தோழர்கள் பி. வெங்கடகிருட்டிணன், சி. கிருட்டிணமூர்த்தி, என். கிட்டப்பா ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

*　*　*

19—5—57 காலை 8½ மணிக்கு சென்னை-வரதாராசபுரம் தோழர் மா. கோவிந்தராசன்—தோழியர் ம. மேரியம்மாள் வாழ்க்கை ஒப்பந்த விழா, சென்னை—சிந்தாதிரிப்பேட்டை, பஜார் தெரு, 8-ம் எண் இல்லத்தில், தோழர் அ. பொ. அரசு தலைமையில் நடைபெறும்; தோழர்கள் கபிலன், திருக்குறள் வி. முனுசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக் கூட்டம்

2—6—57 காலை 9-மணிக்கு
சென்னை கோகலே மன்றத்தில்

தலைவர்: 'முரசொலி' - **மாறன்**

பேச்சாளர்கள்;

அண்ணா, மு. கருணாநிதி

★

நன்கொடை: ரூ. 1; அணா 8.

—தி. மு. க. மாணவர் கிளை

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.